# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

அரும்பாக்கம், சென்னை 600 106

செய்தி வெளியீடு எண். 5 நாள் 30.03.2010

அரசாணை (நிலை) எண்.159, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ-2) துறை, நாள் 03.09.2009 மூலம் திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி பேரூராட்சி மன்றம் கலைக்கப்பட்டு, அம்மன்றத்திற்கு 25.02.2010 முடிய தனி அலுவலர் நியமனம் செய்து அரசு ஆணையிட்டது. அரசாணை (நிலை) எண்.41, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 25.02.2010 மூலம் மேற்கண்ட பேரூராட்சி மன்றத்திற்கு தேர்தல் நடத்தப்பட்டு அம்மன்றம் மீண்டும் அமைக்கப்படும் நாள் வரை அல்லது 25.02.2010ஆம் நாளிலிருந்து மேலும் இரண்டு மாதங்கள், இவற்றில் எது முன்னரோ அந்நாள் வரை கொரடாச்சேரி பேரூராட்சி மன்றத்திற்கு தனி அலுவலர் நியமனம் செய்து அரசு ஆணை வெளியிட்டது. அதன்படி கொரடாச்சேரி பேரூராட்சி மன்றத்தின் அனைத்து 15 வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கான தேர்தல் அறிவிக்கை 31.03.2010 அன்று வெளியிடப்படும். அன்றே வேட்புமனு தாக்கல் துவங்கும். வாக்குப்பதிவு 19.04.2010 அன்று காலை 7.00 மணிக்கு துவங்கி மாலை 5.00 மணியுடன் முடிவடையும். வாக்கு எண்ணுகை 21.04.2010 அன்று நடைபெறும். மேற்கண்ட பேரூராட்சியில் 3857 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் ஆண் வாக்காளர்கள் 1942 மற்றும் பெண் வாக்காளர்கள் 1915 ஆவர். மேற்கண்ட பேரூராட்சி தேர்தலில் 15 வாக்குச் சாவடிகளில் தேர்தல் நடத்தப்படும். மேற்கண்ட தேர்தலுக்கான தேர்தல் கால அட்டவணை பின்வருமாறு-

தேர்தல் கால அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 1. | தேர்தல் அறிவிக்கை வெளியீடு மற்றும் வேட்புமனு தாக்கல் செய்ய ஆரம்ப நாள் | - | 31.03.2010 |
| 2. | வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் | - | 07.04.2010 |
| 3. | வேட்புமனு பரிசீலனை | - | 08.04.2010 |
| 4. | வேட்புமனு திரும்ப பெறுதலுக்கான கடைசி நாள் | - | 10.04.2010 |
| 5. | வாக்குப் பதிவு நடைபெறும் நாள் | - | 19.04.2010 |
| 6. | வாக்கு எண்ணுகை நாள் | - | 21.04.2010 |

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

30/3/10

மக்கள் தொடர்பு அலுவலர்

17D/2010/March/Koradachery Press Release.doc